**PSLE TAMIL EXAM REVISION WORKSHEETS (PAPER 2) - LEVEL 1**
**PSLE தமிழ்த் தேர்வு பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 1**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 13 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 14 - 26 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 27 - 39 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 40 - 52 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 53 - 65 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 66 - 78 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 79 - 91 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 92 - 104 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 105 - 117 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 118 - 130 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 131 - 143 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 144 - 156 |
| 13 | அருஞ்சொற்பொருள் (தேர்வுத்தாள் 1 - 12) | 157 - 165 |
| 14 | விடைத்தாள் | 166 - 177 |


WORDSMITH BEYOND LEARNING

# தேர்வுத்தாள் 1

90

## 'அ' பிரிவு

### A1 வேற்றுமை

**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q1. அகிலன் தன் வேலையாட்களிடம் உடனே ____________ தொடங்கச் சொன்னார்.

1) வேலையை 3) வேலையின்
2) வேலைக்கு 4) வேலையிடம் ( )

Q2. பவானி தோட்டத்தில் நட்ட ____________ உரம் போட்டாள்.

1) பூச்செடிக்கு 3) பூச்செடியினது
2) பூச்செடியின் 4) பூச்செடியில் ( )

Q3. அருணன் பிறந்தநாள் விழாவிலிருந்து ____________ வீடு திரும்பினான்.

1) மனநிறைவுக்கு 3) மனநிறைவால்
2) மனநிறைவிடம் 4) மனநிறைவுடன் ( )

Q4. அவன் பொய்யான தகவல் கூறி இக்கட்டான ____________ மாட்டிக் கொண்டான்.

1) சூழலுக்கு 3) சூழலை
2) சூழலுடன் 4) சூழலில் ( )

Q5. பேரும் புகழும் பெற்று வாழ்ந்த அந்தக் கலைஞர் இறந்த பிறகும் மக்கள் ____________ வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

1) மனதோடு 3) மனதுக்கு
2) மனதில் 4) மனதுடன் ( )

## A2 செய்யுள் / பழமொழி

**Q6 முதல் Q10 வரையுள்ள <u>செய்யுள்/பழமொழியை</u> நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q6. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் ____________

1) புகழ் 3) சிறப்பு
2) கீர்த்தி 4) மாண்பு ( )

Q7. தான் பிடித்த முயலுக்கு ____________ கால்

1) நான்கே 3) இரண்டே
2) மூன்றே 4) ஒன்றே ( )

Q8. கேடில் விழுச்செல்வம் ____________ ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

1) கல்வி 3) மணற்கேணி
2) அன்பின் 4) ஒருமைக்கண் ( )

Q9. நிழலின் அருமை ____________ தெரியும்

1) குளிரில் 3) வெயிலில்
2) மழையில் 4) பனியில் ( )

Q10. வல்லவனுக்கு ____________ ஆயுதம்

1) புல்லும் 3) கல்லும்
2) கத்தியும் 4) பல்லும் ( )

## A3 அடைமொழி / எச்சம்

**Q11 முதல் Q15 வரையுள்ள <u>அடைமொழி/எச்சத்தை</u> நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q11. இனிமையான பாடலை ______________ பாடிய அவளுக்குப் பரிசு கிடைத்தது.

1) அழகாக　　3) கடினமாக
2) அழகான　　4) கடினமான　　(　　　)

Q12. கோகிலா வீட்டுப் பாடங்களை முறையாக ______________ முடிப்பாள்.

1) செய்ய　　3) செய்து
2) செய்கிற　　4) செய்　　(　　　)

Q13. கோமதி தன் உடலை ______________ **<u>பேணி</u>** வருகிறாள்.

1) முறையாக　　3) வலிமையாக
2) முறையான　　4) வலிமையான　　(　　　)

Q14. பரணி ஒரு புதிய தொழிற்சாலையை அமைத்து அதற்குத் தகுதியான நிர்வாகியை ______________ பணியில் ஈடுபட்டுள்ளார்.

1) தேடும்　　3) தேடிய
2) தேட　　4) தேடு　　(　　　)

Q15. ______________ கணிதத்தை விரைவாகச் செய்து முடித்தான் ராமானுஜம்.

1) எளிமையான　　3) குழப்பமான
2) எளிமையாக　　4) குழப்பமாக　　(　　　)

## A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

பல நாட்களாக இங்கிலாந்திற்குச் செல்ல வேண்டும் என்ற Q16. ____________. ஆனால், அப்பாவின் வேலை **பளு** காரணமாக அதிக நாட்கள் விடுமுறை எடுக்க முடியாது. அப்பாவும் நான் கேட்கும் போதெல்லாம் எதாவது கூறி ஒவ்வொரு நாளும் அதனை Q17. ________________ கழித்துக் கொண்டே இருந்தார். இதனால் எனக்கும் அப்பாவுக்கும் **வாக்குவாத**மாகவே இருக்கும்.

எனக்கு இங்கிலாந்து என்றால் மிகவும் பிடிக்கும். என்னுடைய உற்றார் உறவினர்கள் அங்குதான் Q18.________________. ஒரு நாள் என்னுடைய அக்காவுக்குத் தொடர்பு கொண்ட போது இங்கிலாந்தின் சிறப்பு வாய்ந்த ஒரு சில இடங்களைப் பற்றிக் கூறினார். ஒவ்வொரு இடங்களைப் பற்றி மிக அழகாக **வர்ணித்தார்**. எனக்கு எப்படியாவது அந்த நாட்டிற்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை Q19.________________ கொண்டே போனது. ஆனால் அதைப் பற்றி நினைக்கும் போதேல்லாம் அப்பா மீது வெறுப்பு வரும்.

ஒவ்வொரு நாளும் இங்கிலாந்தைப் பற்றிய கனவோடு வாழ்ந்து கொண்டிருந்தேன். அதை நினைத்துக் கொண்டே உறங்கச் சென்றேன். ஒரு நாள் அப்பா திடீரென்று என்னை எழுப்பி எனக்கு மிகவும் பிடித்த மிட்டாய் வாங்கி சமாதானப்படுத்தினார். அதன் பிறகு, “எதிலும் கோபம் கொள்ளாதே, Q20. ____________________ இருந்தால் ஒரு நாள் நீ கேட்டது கிடைக்கும்” என்று அப்பா அன்பாகக் கூறினார். நானும் அதைப் புரிந்து கொண்டு மன்னிப்புக் கேட்டேன்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Q16. | 1) ஆசை | 3) பாசம் | | | |
| | 2) வெட்கம் | 4) வேசம் | ( ) | | |
| Q17. | 1) கொட்டி | 3) தட்டி | | | |
| | 2) சொல்லி | 4) பேசி | ( ) | | |
| Q18. | 1) உலாவுகிறார்கள் | 3) வசிக்கிறார்கள் | | | |
| | 2) செல்கிறார்கள் | 4) குடியேறுகிறார்கள் | ( ) | | |
| Q19. | 1) உயரமாகி | 3) தாழ்வாகி | | | |
| | 2) அதிகமாகி | 4) பொறாமையாகி | ( ) | | |
| Q20. | 1) கோபத்துடன் | 3) இன்பத்துடன் | | | |
| | 2) மாற்றத்துடன் | 4) பொறுமையுடன் | ( ) | | |

## B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

சிவா, காசி இருவரும் அண்ணன் தம்பிகள். மீன்பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தனர். ஒருநாள் நண்பகல் நேரம், அவர்கள் இருவரும் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவனைப் பார்க்கவே ***பரிதாபமாக*** இருந்தது.

அந்தப் பிச்சைக்காரன் அவர்களிடம் உணவுத் தரச் சொல்லிக் கெஞ்சினான். இரக்கப்பட்ட சிவா அவனுக்கு உணவு தந்தான். காசியோ, தனது அண்ணனை அவ்வாறு செய்வதிலிருந்து தடுத்தான். பிச்சைகாரர்கள் தங்களது சோம்பல் குணத்தினால்தான் பிச்சை எடுகிறார்கள் என்றும், அவர்களுக்கு என்றும் நாம் இரக்கம் காட்டக் கூடாது என்றும் கூறினான். ஆனால் சிவா, காசியின் பேச்சைக் கேளாமல் அப்பிச்சைக்காரனுக்கு உணவழித்தான்.

மீண்டும் மறுநாள் அப்பிச்சைக்காரன் உணவுக்காக அங்கே வந்தான். சிவா, அப்பிச்சைக்காரனுக்கு மீண்டும் உணவு தந்தான். அப்பிச்சைக்காரன் தொடர்ந்து வீட்டிற்கு வந்து பிச்சை எடுப்பதை விரும்பாத காசி, வீட்டிலிருந்த தூண்டில் ஒன்றை எடுத்துக் கொண்டான். பிறகு, அப்பிச்சைக்காரனை அவன் தரதரவென்று இழுத்துக் கொண்டு ஏரிக்கரைக்கு வந்தான். அங்கே அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுத் தந்துவிட்டு, அதை வைத்துப் பணம் சம்பாதித்துக் கொள்ள கூறினான். அன்றிலிருந்து அந்தப் பிச்சைக்காரன் அவர்கள் வீட்டிற்கு வருவதே இல்லை.

பல ஆண்டுகள் சென்றன. **<u>செல்வந்தர்</u>** ஒருவர் அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் அங்கே வந்தார். அவர் கையில் தங்கத்தால் செய்யப்பட்ட சிறிய தூண்டில் ஒன்று இருந்தது. சிவாவும் காசியும் அவரைப் பார்த்தனர். தங்கத் தூண்டிலைக் காசியிடம் தந்தார் அவர். "என் அன்பளிப்பாக இதை வைத்துக் கொள்ளுங்கள்!" என்றார். அச்செல்வந்தர் தன் வீட்டிற்கு வந்த பிச்சைக்காரன் தான் என்பதை உணர்ந்தான் சிவா.

கோபத்தால் துடித்த சிவா, அவன் பிச்சைக்காரனாக வீட்டிற்கு உணவுத் தேடி வந்த பொழுது உதவியது அவன்தான் என்றும் அந்தத் தங்கத் தூண்டிலுக்கு உரியவன் தான்தான் என்றும் கூறினான். ஆனால், அவரோ, "இது உங்கள் தம்பிக்குத்தான் உரியது!" என்று உறுதியாகச் சொன்னார். இதை சிவா ஏற்றுக் கொள்ளவில்லை. **<u>வழக்கை</u>** நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றான். நடந்ததை எல்லாம் விசாரித்தார் நீதிபதி.

சிவாவைப் பார்த்து அவர், "நீ இவருக்கு உணவு அளித்துக் காப்பாற்றியது உண்மைதான். நீ செய்த உதவி இவர் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. உன் தம்பியோ இவர் வாழ்வதற்கு வழி காட்டினார். அதைப் பயன்படுத்தி இவர் இந்த நிலைக்கு உயர்ந்துள்ளார். நிலையான உதவி செய்த காசிக்கு இவர் தூண்டிலை அன்பளிப்பாகக் கொடுத்தது சரியே. இந்தத் தங்கத் தூண்டில் காசிக்கே உரியது. இதுவே என் தீர்ப்பு!" என்றார்.

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)**

Q21. காசி ஏன் தன் அண்ணணைப் பிச்சைக்காரனுக்கு உதவி செய்வதிலிருந்து தடுத்தான்?

1) அவர்களிடம் போதிய உணவு இல்லாததால்
2) பிச்சைக்காரனைக் காசிக்குப் பிடிக்காததால்
3) பிச்சைக்காரன் உணவிடும்படி கெஞ்சியதால்
4) பிச்சைக்காரனின் சோம்பல் குணத்தைப் பிடிக்காததால் ( )

Q22. பிச்சைக்காரன் எத்தனை நாள் தொடர்ந்து சிவா மற்றும் காசியின் வீட்டிற்கு உணவுக் கேட்டுச் சென்றான்?

1) ஒன்று 3) இரண்டு
2) மூன்று 4) நான்கு ( )

Q23. காசி பிச்சைக்காரனை ஏரிக்கரைக்கு அழைத்துச் சென்றதன் காரணம் என்ன?

1) தன் வீட்டிற்கு மீண்டும் அப்பிச்சைக்காரன் வரக்கூடாது என்பதற்காக
2) அப்பிச்சைக்காரனுக்கு மீன் பிடிக்கக் கற்றுத் தருவதற்காக
3) அப்பிச்சைக்காரனை அடித்து துன்புறுத்துவதற்காக
4) அப்பிச்சைக்காரனுக்குப் பாடம் புகட்டுவதற்காக ( )

Q24. செல்வந்தராக வந்த பிச்சைக்காரன் என்ன செய்தான்?

1) காசியையும் சிவாவையும் குறு குறுவெனப் பார்த்தான்
2) காசியை அழைத்து நன்றி கூறினான்
3) காசிக்கு ஒரு தங்கத் தூண்டிலைக் கொடுத்தான்
4) சிவாவிற்குத் தங்கத் தூண்டில் ஒன்றைப் பரிசாக அளித்தான் ( )

# சொற்பொருள்

**வினா Q25-இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (2 மதிப்பெண்கள்)**

Q25. பரிதாபமாக

1) இரக்கமாக 3) இழிவாக
2) பொறாமையாக 4) பயமாக ( )

# 'ஆ' பிரிவு

## C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

**பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)**

Q26. மலேசியா இயற்கை ______________ நிறைந்த ஒரு நாடாகும். ( )

Q27. சிங்கப்பூர் பூ மலையில் உள்ள **தடாக**த்தில் அழகிய ______________ நீந்துகிறது. ( )

Q28. நடன ______________ மீது மிகவும் ஆர்வமுடைய சித்ரா அரங்கேற்றத்தின் போது அனைவராலும் **போற்ற**ப்பட்டாள். ( )

Q29. என் அக்கா மார்கழி மாதம் முழுவதும் வாசலில் தினமும் அழகிய ______________ வரைவாள். ( )

| | |
|---|---|
| 1. வளம் | 2. கோலம் |
| 3. அன்னம் | 4. களை |
| 5. கோளம் | 6. அண்ணம் |
| 7. கலை | 8. வலம் |

WORDSMITH BEYOND LEARNING

## D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

**பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி. (10 மதிப்பெண்கள்)**

# மொழியை வளர்ப்போம்!




**சிறுவர்களுக்கான தமிழ் மொழி வகுப்பு**

**10 மே 2021 ஆரம்பமாகுகிறது**

- 5 வயது முதல் 10 வயது நிரம்பிய சிறுவர்களுக்கான வகுப்பு
- பதிவு கட்டணம் $100 மற்றும் மாதக் கட்டணம் $50 மட்டுமே
- பெயர் பதியும்போது <u>பதிவு கட்டண</u>மும் முதல் மாதக் கட்டணமும் உடன் செலுத்த வேண்டும்

- தமிழ் எழுத்து அறிமுகம்
- <u>தொடர்பாடல்</u> திறனை மேம்படுத்துதல்
- தமிழ் மொழி வாசிப்புத் <u>திறனை</u> மேம்படுத்துதல்
- இலக்கணம் / பழமொழி செய்யுள் பயன்பாடு கற்றல்
- எளிய முறையில் தமிழைக் கற்கலாம்

சிறப்புக் கழிவுகள்

- முதல் 50 மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி புத்தகம் கிடைக்கும்
- மாதிரி கட்டுரை புத்தகமும் இலவசமாகக் கொடுக்கப்படும்

**ஆர்வமுள்ளோர் தொடர்புக்கொள்ள வேண்டிய எண்:**

**திருமதி.கமலா : +65 9111 3434**

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையைக் கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q30. யாரெல்லாம் இந்தத் தமிழ் மொழி வகுப்பில் கலந்துகொள்ள தகுதியானவர்கள்?

1) முதியவர்கள்
2) சிறுவர்கள்
3) ஆசிரியர்கள்
4) பொது மக்கள் ( )

Q31. தமிழ் மொழி வகுப்பிற்குக் கொடுக்கப்படும் சிறப்புக் கழிவுகள் என்ன?

1) முதல் 50 பேருக்குச் சிறப்புக் கழிவு உண்டு
2) முதல் 50 பேருக்கு இலவசப் புத்தகமும் கட்டுரை புத்தகமும் உண்டு
3) முதல் 50 பேருக்கு இலவசக் கட்டுரை புத்தகம் உள்ளது
4) முதல் 50 பேருக்கு இலவசப் பயிற்சி புத்தகமும் மாதிரி கட்டுரை புத்தகமும் வழங்கப்படும். ( )

Q32. திரு.குமரன் தனது இரண்டு மகள்களை இவ்வகுப்பில் சேர்த்து விட ஆர்வம் கொள்கிறார். எனவே, திரு. குமரன் செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு?

1) $150
2) $100
3) $300
4) $400 ( )

Q33. இந்தத் தமிழ் மொழி வகுப்பில் பங்கெடுக்கும் மாணவர்கள் பெறக்கூடிய நன்மைகள் யாவை? (4 மதிப்பெண்கள்)

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP grades + achieve Big

## D8 சுயவிடைக் கருத்தறிதல்

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

ஒரு காட்டில் நரி ஒன்று இருந்தது. அந்தக் நரி தன்னை வெல்ல யாராலும் முடியாது என்று **கர்வ**த்துடன் இருந்தது. அது அந்தக் காட்டில் இருந்த ஆடுகளை எல்லாம் பிடித்துத் தின்று வந்தது. அதனால், ஆடுகள் அனைத்தும் மிகவும் பயந்தன. அதுமட்டுமின்றி, நரியின் தொல்லையினால் எங்கும் வெளியில் செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டன. நரியின் தீராத பசியினால் ஆடுகளின் எண்ணிக்கையும் குறைந்து கொண்டே போனது. இதற்கு என்ன வழி என்று தெரியாமல் ஆடுகளின் தலைவன் ஒரு கூட்டத்தைக் கூட்டியது. ஆடுகள் தங்கள் நிலையை எண்ணி **புலம்பின**.

உடனே அந்த ஆட்டுத் தலைவன் நரியை விரட்ட தீவிரமாக யோசித்தது. மற்ற ஆடுகளும் நரியை விரட்ட நிறைய யோசனைகளைக் கூறின. ஆனால், தலைவன் ஆட்டுக்கு எதுவுமே சரியாகப்படவில்லை. உடனே, ஆற்று நீரைப் பார்த்ததும் ஒரு யோசனை தோன்றியது. அந்த யோசனை கட்டாயம் நரியை விரட்ட உதவும் என்று நினைத்தது. ஆடுகளின் தலைவன், “வருத்தம் வேண்டாம் ஆடுகளே! நாம் ஏன் ஒரு **தந்திரம்** செய்து நரியை விரட்ட கூடாது? நரியுடன் ஒரு போட்டி வைக்கலாம். நாம் தோற்றத்தில் ஒரே மாதிரி இருப்பதால் நரியினால் நம் தந்திரத்தைக் கண்டுப்பிடிக்க முடியாது” என்றது. தலைவன் ஆடு அந்த யோசனையைக் கூறியதும் பிற ஆடுகள் மகிழ்ச்சியில் இருந்தன.

அனைத்து ஆடுகளும் நரியிடம் சென்றன. தலைவன் ஆடு நரியிடம், “நரி ராஜா அவர்களே நமக்குள் ஒரு போட்டி வைக்கலாமா?” என்றது. நரி அலட்சியமாக “என்ன போட்டி?” என்று கேட்டது. தலைவன் ஆடு சொன்னது, “நான் நீருக்குள் மூச்சை அடக்கிக் கொண்டு இருப்பேன். அதுபோல நீங்களும் என்னுடன் சேர்ந்து நீருக்குள் மூச்சை அடக்கிக் கொள்ள வேண்டும். யார் அதிக நேரம் **தாக்குப்பிடி**க்கிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவர்கள். தோற்பவர் இந்தக் காட்டை விட்டுப் போய்விட வேண்டும்” என்றது.

நரி ஆடுகளை ஏளனமாகப் பார்த்துச் சிரித்தது. என்னை **வெல்ல** யாராலும் முடியாது என்றது. “என்னை விட உங்களுக்குப் பலம் கொஞ்சம் குறைவுதான். எப்படியும் என்னை வீழ்த்த முடியாது என்று தெரிந்தும் போட்டிக்குக் அழைக்கிறீர்களா?” என்று கர்வத்தோடு ஆடுகளைப் பார்த்துக் கேட்டது. பிறகு, நரி போட்டிக்கும் ஒப்புக்கொண்டது.

போட்டி நாள் வந்தது. தலைவன் ஆடு நீருக்குள் மூச்சை அடக்கிக் மூழ்க தொடங்கியது. நரியும் அதனுடன் சேர்ந்து நீருக்குள் **மூழ்கியது**. தலைவன் ஆடு **களைப்பு** அடைந்ததும் அடுத்த ஆடு மூழ்க தொடங்கியது. ஆடுகள் மாறி மாறி மூழ்கின. ஆடுகளின் தந்திரம் நரியினால் கண்டுப்பிடிக்க முடியவில்லை. ஆடுகளைவிட நரியினால் நீண்டநேரம் மூழ்க முடியவில்லை. நரி தோல்வி கண்டதால் காட்டை விட்டு வெளியேறியது. அதற்குப் பிறகு ஆடுகள் மகிழ்ச்சியாக அந்தக் காட்டில் வாழ்ந்தன.

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (22 மதிப்பெண்கள்)**

Q34. ஆடுகள் எதனால் நரியைப் பார்த்துப் பயப்படுகின்றன? (2 ம)

______________________________________________

______________________________________________

______________________________________________

Q35. தலைவன் ஆடு ஏன் கூட்டம் கூட்டியது? (3 ம)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

Q36. நரியை விரட்டுவதற்காகத் தலைவன் ஆட்டின் தந்திரம் என்ன? (3 ம)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q37. நரி போட்டிக்கு ஏன் ஒப்புக் கொண்டது? (3 ம)

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

Q38. நரி தோற்றுப் போனதுக்குக் காரணம் என்ன? (3 ம)

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

Q39. இறுதியில் நரியும் ஆடுகளும் என்ன ஆனது? (3 ம)

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP grapes + achieve Big

Q40. இக்கதையில் ஆடுகளின் தந்திரம் சரியானதா என்பதை விளக்கி உன் நண்பனுக்கு ஒரு குறிப்பு எழுது. (4 ம)

அன்புள்ள நண்பனுக்கு

இக்கதையில் ஆடுகளின் தந்திரம் ______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

இப்படிக்கு
உன் தோழன்

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS + JUMP STARS + achieve BIG

# அருஞ்சொற்பொருள்

## தேர்வுத்தாள் 1

| | | | |
|---|---|---|---|
| 1. | உரம் | - | செடிகள் செழிப்பாக வளர போடுவது (Fertilizer) |
| 2. | இக்கட்டான | - | சிக்கலான நிலைமை (Critical Situation) |
| 3. | பேணி | - | பாதுகாத்தல் (Preservation) |
| 4. | பளு | - | சுமை (Load) |
| 5. | வாக்குவாதம் | - | சண்டை (Fight) |
| 6. | வர்ணித்தார் | - | ஒன்றைப் பற்றி கூறுவது (Explain) |
| 7. | செல்வந்தர் | - | பணக்காரர் (Rich) |
| 8. | வழக்கை | - | நீதிமன்ற குற்றத்தை (Case) |
| 9. | தடாகம் | - | குளம் (Pond) |
| 10. | போற்ற | - | பாராட்ட (Appreciate) |
| 11. | பதிவு கட்டணம் | - | Registration Fees |
| 12. | தொடர்பாடல் | - | பேசுதல் (Communication) |
| 13. | திறனை | - | ஆற்றலை (Skill) |
| 14. | கர்வம் | - | திமிர் (Arrogant) |
| 15. | புலம்பின | - | மனக்கவலையைப் பகிர்ந்தன (Lamentation) |
| 16. | தந்திரம் | - | ஏமாற்றச் செய்வது (Trick) |
| 17. | தாக்குப்பிடி | - | பொறுமையாக இரு (Keep Calm) |
| 18. | வெல்ல | - | வெற்றிபெற (To Success) |
| 19. | மூழ்கியது | - | தண்ணீருக்குள் இருப்பது (Drowning) |
| 20. | களைப்பு | - | சோர்வு (Tired) |

## தேர்வுத்தாள் 2

| | | | |
|---|---|---|---|
| 1. | புண்படுத்து | - | காயப்படுத்து (Hurting) |
| 2. | குறியாக | - | முழு கவனமாக (More Concentrate) |
| 3. | எதிர்மறை | - | எதிர்மாறாக இருப்பது (Opposite) |
| 4. | நச்சில் | - | வைரஸ் (Virus) |

# PSLE TAMIL EXAM REVISION WORKSHEETS (PAPER 2) - LEVEL 1
# PSLE தமிழ்த் தேர்வு பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 1

## விடைத்தாள்

### தேர்வுத்தாள் 1

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | 9. | 3 | 17. | 3 | 25. | 1 |
| 2. | 1 | 10. | 1 | 18. | 3 | 26. | 1 |
| 3. | 4 | 11. | 1 | 19. | 2 | 27. | 3 |
| 4. | 4 | 12. | 3 | 20. | 4 | 28. | 7 |
| 5. | 2 | 13. | 1 | 21. | 4 | 29. | 2 |
| 6. | 1 | 14. | 1 | 22. | 2 | 30. | 2 |
| 7. | 2 | 15. | 1 | 23. | 2 | 31. | 4 |
| 8. | 1 | 16. | 1 | 24. | 3 | 32. | 3 |

Q33. இந்தத் தமிழ் மொழி வகுப்பில் பங்கெடுக்கும் மாணவர்கள் தமிழ் எழுத்துக்களை அறிந்துக்கொள்வர். மேலும், தமிழ் மொழியில் சரளமாகத் தொடர்பாடவும் வாசிக்கவும் முடியும். மேலும், தமிழ் மொழியை எளிய முறையில் கற்கவும் இலக்கணம் பழமொழி செய்யுள் போன்றவற்றின் பயன்பாட்டையும் கற்றுக் கொள்ளலாம்.

Q34. காட்டில் இருந்த ஆடுகளை எல்லாம் நரி பிடித்துத் தின்றது. நரியின் தொல்லையினால் ஆடுகள் எங்கும் செல்ல முடியாமல் போனதால் ஆடுகள் நரியைப் பார்த்துப் பயப்படுகின்றன.

Q35. ஆடுகள் நரியை எண்ணி பயந்து போய் இருந்தன. நரியின் தொல்லையினால் ஆடுகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போனது. அதற்கு ஒரு தீர்வாக நரியை விரட்ட திட்டம் தீட்டுவதற்காகத் தலைவன் ஆடு கூட்டம் கூட்டியது.

Q36. தலைவன் ஆடு நரியுடன் ஒரு போட்டி ஒன்றை நடத்தி அதில் நரியும் தலைவன் ஆடும் அதிக நேரம் நீரில் மூழ்க வேண்டும் என்றும் ஆடுகளின் தோற்றம் ஒரே மாதிரி இருப்பதால் பிற ஆடுகளும் நரியை ஏமாற்ற நீருக்குள் மாறி மாறி மூழ்கிக் கொள்வார்கள். இதுவே தலைவன் ஆட்டின் தந்திரம் ஆகும்.

Q37. தன்னை யாராலும் வெல்ல முடியாத என்ற திமிர் நரியிடம் இருந்தது. நரிக்கு, ஆடுகள் அனைத்தும் தன்னைவிட பலம் கொண்டவர்கள் இல்லை என்ற எண்ணத்தால் அவர்களை எளிதில் தோற்றடிக்க முடியும் என்று நினைத்துப் போட்டிக்கு ஒப்புக் கொண்டது.

Q38. ஆடுகளின் தந்திரம் நரிக்குத் தெரியவில்லை. தலைவன் ஆடு அதிக நேரம் நீரில் மூழ்கி இருப்பதாக நினைத்துக் கொண்டது. நரியால் அதிக நேரம் நீருக்குள் மூழ்க முடியாததால் அது தலைவன் ஆட்டிடம் போட்டியில் தோற்றுப் போனதற்குக் காரணம் ஆகும்.

Q39. இறுதியில் நரி காட்டை விட்டு வெளியேறியது. ஆடுகளும் நரி போட்டியில் தோற்றுப் போனதை எண்ணி மகிழ்ச்சியடைந்தன. அதன் பிறகு நரி இல்லாத காட்டில் ஆடுகள் சந்தோஷமாக வாழ்ந்து வந்தன.

Q40. இக்கதையில் ஆடுகளின் தந்திரம் தவறு அல்ல. காரணம் ஆடுகள் அனைத்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள நினைத்தன. ஆடுகளின் மகிழ்ச்சிக்கு நரி இடையூராக இருந்தது. நரி ஆடுகளுக்கு அதிகமான தொல்லைகள் கொடுத்தது. எனவே, ஆடுகள் நரியை விரட்ட தந்திரமாக யோசித்து விரட்டியது. ஆகவே, ஆடுகள் செய்தது சரி என்று உணர்கிறேன். நன்றி. (அல்லது பிற ஏற்புடைய விடைகள்)